

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை மதுரை விமான நிலையத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி புத்தகம் வழங்கி வரவேற்றார்.

# தி.மு.க.தேர்தல் அறிக்கையின் மீது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது!

## கழக தேர்தல் அறிக்கைக் குழுத் தலைவர் – கழக துணைப் பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நெல்லையில் பேட்டி!

நெல்லை.ஜன.31.

தி.மு.க.தேர்தல் அறிக்கையின் மீது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை மனுக்களாகத் தந்து வருகிறார்கள். எந்தக் கருத்துக்கணிப்பு வந்தாலும், வராவிட்டாலும் தேர்தல் களம் என்பது திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்குச் சாதகமாக இருப்பதைத் தம்மால் கண்கூடாகப் பார்க்க முடிகிறது என நெல்லையில் நடந்த தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட கழக துணை பொதுச் செயலாளர் கழக தேர்தல் அறிக்கை குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தெரிவித்தார்.



2026 சட்டமன்ற தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு கருத்து கேட்பு கூட்டம் நெல்லை சந்திப்பில் உள்ள ஆர்யாஸ் ஹோட்டலில் குழு தலைவரும் தி.மு.க துணை பொது செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி தலைமையில் நடைபெற்றது .இதில் குழு உறுப்பினர்கள் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம் அப்துல்லா,சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எழிலன்,தமிழரசிரவிக்குமார், கழக செய்தி தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்தரன்,ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி சந்தானம் ஆகியோர் கலந்து கொண்டு மனுக்களை பெற்றனர்.இதில் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த வணிகர்கள் சங்கம்,விவசாயிகள், தொழிலாளர்கள்,பல்வேறு பொதுநல அமைப்புகள்,அரசு ஊழியர் சங்கங்கள் ஆகியோர் கோரிக்கை மனுக்களை குழுவிடம் அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து கழகத் தேர்தல் அறிக்கை குழு தலைவர் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி மாற்றுத்திறனாளிகளிடம் அவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து மனுக்களை பெற்றுக்கொண்டார்.

பின்னர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் செய்தியாளர் களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது.

தி.மு.க.தேர்தல் அறிக்கையின் மீது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை மனுக்களாகத் தந்து வருகிறார்கள்.

“ஒரு வாக்குறுதியைக் கொடுத்தால், அதை நிச்சயம் நிறைவேற்றக்கூடிய ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தான்” என்று மக்கள் உறுதியாக நம்புகிறார்கள். அடுத்து அமையப்போவது திமுக ஆட்சிதான் என்கிற நம்பிக்கையோடு தான் மக்கள் மனுக்களைத் தருகிறார்கள்

நிச்சயமாகப் புதிய கட்சிகள் கூட்டணிக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது, அவ்வாறு எந்தக் கட்சி வரும், யாரை இணைப்பது என்பதைப் பற்றிய முடிவை முதலமைச்சர் (திமுக தலைவர்) அவர்கள் தான் அறிவிப்பார்கள் எந்தக் கருத்துக்கணிப்பு வந்தாலும், வராவிட்டாலும் தேர்தல் களம் என்பது திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்குச் சாதகமாக இருப்பதைத் தம்மால் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. ராகுல் காந்தியுடனான பேச்சு வார்த்தை மிகவும் சுமூகமாக இருந்தது.

கூட்டணியை நான் உறுதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், கடந்த பல ஆண்டுகளாகவே காங்கிரஸ் இயக்கத்தோடு திமுக கூட்டணியில் தான் இருந்து வருகிறது.

“எங்களுக்குள் எந்த மோதல் போக்கும் இல்லை உறவு சுமூகமாகவே உள்ளது என்றார்.

காங்கிரஸ் எம்.பி மாணிக்தாகூர் தன்மானமே முக்கியம் என்று பேசியது குறித்த கேள்விக்கு எல்லாருக்கும் தன்மானம் தான் முக்கியம். சுயமரியாதை என்பது அனைவருக்கும் பொதுவானது. தன்மானம் முக்கியம் இல்லை என்று யாரும் சொல்லப்போவது இல்லை, என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் அமைச்சர்கள் கீதாஜீவன், மனோதங்கராஜ், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ,நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ, தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், கன்னியாகுமரி மாவட்ட செயலாளர் மேயர் மகேஷ், நெல்லை மாநகர பொறுப்பாளர்கள் மேற்கு சு.சுப்பிரமணியன், கிழக்கு தினேஷ் முன்னாள் அமைச்சர் மைதீன் கான் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் சண்முகையா, மார்க்கண்டேயன்,மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,

முன்னாள் எம்பி ஞானதிரவியம், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் மாலை ராஜா,ஏ.எல்.எஸ்.லெட்சுமணன் மற்றும் தி.மு.க நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டம் – வடலூருக்கு

# கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு வருகை!

## மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*வடலூர், ஜன. 31-*

*வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் வரும் நாளை (1.2.2026) காலை 10 மணியளவில் சட்டப்பேரவை தேர்தல் 2026 தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளை கேட்க உள்ளனர்.*

*கழக துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி தலைமையில் தி.மு.க. செய்தி தொடர்புக்குழுதலைவர் டி.கே. எஸ்.இளங்கோவன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி. டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், தொழில் துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி.ராஜா, தி.மு.க. அயலக அணி செயலாளர், எம். எம்.அப்துல்லா, செய்தி தொடர்பு குழு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மருத்துவர் அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., திமுக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி தி.மு.க. மகளிர் தொண்டரணி இணை செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சந்தானம் ஐஏஎஸ், சுரேஷ் சம்பந்தம் ஆகியோர் அடங்கிய குழுவினர் வருகை தந்து பல தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளை கேட்க உள்ளனர்.*



*அது சமயம் அனைத்து தரப்பினரையும் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் அனைவரும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினரை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.*



தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம்,வன்னிப்பட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்க்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் புதூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராமராஜன்,தினகரன், புதூர் ஒன்றிய செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், செல்வராஜ், இம்மானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



**29.01.2026 நிகழ்வுகள்**

### 1. கொச்சி-கன்னியாகுமரி-தூத்துக்குடி இயற்கை எரிவாயு குழாய் திட்டங்களின் செயல்பாடுகள் என்ன?

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



கொச்சி-கன்னியாகுமரி-தூத்துக்குடி இயற்கை எரிவாயு குழாய் திட்டத்தின் (KKTPL) தற்போதைய நிலவரம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. விரிவான கேள்விகளை முன்வைத்துள்ளார். இத்திட்டத்தினால் விளைநிலங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து விவசாயிகள், உள்ளூர் மக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், தொழில்நுட்ப ரீதியாகக் குழாய்கள் புதைக்கப்படும் ஆழம், கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் திறந்த அகழி, கிடைமட்ட திசை துளையிடுதல் முறைகள், பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக அமைக்கப்படும் எச்சரிக்கை விரிப்புகள் குறித்த விவரங்களைக் கோரியுள்ளார். குறிப்பாக, கட்டுமானப் பணிகளுக்குப் பிறகு நிலத்தை அதன் பழைய நிலைக்குச் சீரமைப்பதற்கான காலக்கெடு, விவசாயிகள் எவ்வித இடையூறுமின்றித் தங்களது பணிகளைத் தொடர்வதை உறுதி செய்ய அரசு வகுத்துள்ள தணிப்பு உத்திகள் குறித்தும் அவர் விளக்கம் கேட்டுள்ளார்.

### 2. சூழலியல் அனுமதி விதிகளில் மாற்றம் செய்தது ஏன்?

**திருச்சி சிவா கேள்வி**



பாதுகாக்கப்பட்ட சூழலியல் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான அனுமதி விதிகளை மாற்றியமைத்துள்ளது குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். நிலம் கையகப்படுத்துவதற்கான ஒப்புதல் பெறுவதற்கு முன்பே அனுமதி வழங்கப்படலாம் என்பதும் இந்த நடவடிக்கை தொழில்துறை அமைப்புகளின் கோரிக்கையின் பேரில் எடுக்கப்பட்டது என்பதும் உண்மையா எனவும் கேட்டுள்ளார். இந்தச் செயல்பாட்டில் காடுகளில் வசிக்கும் பழங்குடி சமூகத்தினருடன் கலந்தாலோசிக்கப்பட்டதற்கான ஆதாரங்களையும் அவர் கோரியுள்ளார்.

### 3. விமானப் போக்குவரத்துத் துறையின் பாதுகாப்பை உறுதிசெய்க!


**எஸ். ஜெகத்ரட்சகன்**



தி.மு.க. மக்களவை உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், இந்திய விமானப் போக்குவரத்துத் துறையின் பாதுகாப்பு மற்றும் விசாரணை நடைமுறைகள் குறித்து மிக முக்கியமான கேள்விகளை எழுப்பியுள்ளார். விமான விபத்து விசாரணைப் பணியகம் (AAIB) சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நிலையில், அதன் நிறுவன சுதந்திரத்தை உறுதி செய்வதில் உள்ள தடைகள் மற்றும் 1997-ஆம் ஆண்டின் ஏர் மார்ஷல் ஜே.கே. சேத் குழுவின் பரிந்துரைகள் இன்னும் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படாததற்கான காரணங்களை அவர் கோரியுள்ளார். மேலும், விபத்து விசாரணை அறிக்கைகளை வெளியிடுவதில் நிலவும் காலதாமதம், வெளிப்படைத்தன்மை குறைபாடுகள் குறித்து அரசு ஆய்வு செய்துள்ளதா என்றும், பெரும்பாலான விபத்துகளுக்கு விமானியின் தவறு என்பதையே காரணமாகக் கூறி, பராமரிப்பு மற்றும் ஒழுங்குமுறை சார்ந்த முறையான குறைபாடுகள் மறைக்கப்படுகின்றனவா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இறுதியாக, கடந்த இருபது ஆண்டுகளில் நிகழ்ந்த விமான விபத்துகளுக்கான காரணங்கள் குறித்த விரிவான தரவுகளை அரசாங்கம் பராமரிக்கிறதா என்பது குறித்தும் அவர் விளக்கம் கோரியுள்ளார்.

### 4. சதுப்புநிலக் காடுகளை பராமரிக்க நடவடிக்கை என்ன?

**எஸ். கல்யாணசுந்தரம் கேள்வி**



மிஷ்டி, டைன்-ஷோர் திட்டங்கள் மற்றும் பிற மத்திய/மாநில கூட்டுத் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் சதுப்புநிலக் காடுகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து எஸ். கல்யாணசுந்தரம் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

மாநிலத்தின் கடற்கரையோரம், குறிப்பாக சுனாமி பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில், சதுப்புநிலக் காடுகள் வளர்ப்பு, மறுசீரமைப்பு மற்றும் கடலோர உயிரிப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி விவரங்கள் யாவை, கடந்த மூன்று ஆண்டுகளில் மாவட்டம் வாரியாகவும், கடலோரப் பகுதி வாரியாகவும் சேர்க்கப்பட்ட அல்லது மறுசீரமைக்கப்பட்ட சதுப்புநிலக் காடுகளின் பரப்பளவு எவ்வளவு மற்றும் மாநிலத்தில் உள்ள சதுப்புநிலச் சூழல் அமைப்பின் மூலம் கார்பன் பிரித்தெடுத்தல், பல்லுயிர் பெருக்கம் மற்றும் சமூக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை? எனவும் கேட்டுள்ளார்.

### 5. விமானத் துறையில் இறக்குமதி சார்பை குறைத்திடுக!

**ஈரோடு எம்.பி. கே. இ. பிரகாஷ்.**



திமுக மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ், இந்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் விமானங்கள், என்ஜின்கள், அதன் உதிரிபாகங்களுக்காக வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை குறித்து மிக முக்கியமான கேள்விகளை எழுப்பியுள்ளார். குறிப்பாக, பராமரிப்பு, பழுதுபார்ப்பு, மாற்றியமைத்தல் (MRO – Maintenance, Repair, and Overhaul) பணிகளுக்கான உதிரிபாகங்களை இறக்குமதி செய்வதால் ஏற்படும் கூடுதல் செயல்பாட்டுச் செலவுகள் மற்றும் அது விமான நிறுவனங்களின் நிதிநிலையில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளதா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், இந்தியாவிலேயே விமானப் பாகங்களைத் தயாரிக்கும் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலமும், உள்நாட்டு MRO வசதிகளை மேம்படுத்துவதன் மூலமும் இந்த இறக்குமதிச் சார்பைக் குறைக்க அரசு எடுத்து வரும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் கொள்கை முடிவுகள் என்ன என்பது குறித்தும் அவர் விளக்கம் கோரியுள்ளார்.

### 6. விமானிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துக!

**ஈரோடு எம்.பி. கே.இ. பிரகாஷ்.**

தி.மு.க. மக்களவை உறுப்பினர் கே.இ. பிரகாஷ், இந்திய விமான போக்குவரத்துத் துறையில் அதிகரித்து வரும் விமானங்களின் எண்ணிக்கை, விமான நிலைய விரிவாக்கப் பணிகளைக் கருத்தில் கொண்டு, தற்போதைய விமானி-விமான விகிதம் குறித்து அரசாங்கம் முறையான மதிப்பீடு செய்துள்ளதா என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். குறிப்பாக, விமானப் பாதுகாப்பு ஊழியர்களின் ஓய்வு நேரம், விமானிகளின் பணி-தனிப்பட்ட வாழ்க்கை சமநிலை ஆகியவற்றில் சமரசம் செய்யாமல் விமான சேவைகளைத் தடையின்றி நடத்தப் போதுமான விமானிகள் உள்ளார்களா என்றும், ஒரு விமானத்திற்குத் தேவையான குறைந்தபட்ச விமானிகளின் எண்ணிக்கை குறித்த விதிமுறைகளில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்படுமா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், விமானிகளின் பற்றாக்குறையைப் போக்கப் பயிற்சித் திறனை மேம்படுத்துதல் உள்ளிட்ட புதிய முயற்சிகளை அரசு திட்டமிடுகிறதா என்பது குறித்தும் அவர் விளக்கம் கோரியுள்ளார்.

### 7. அங்கீகரிக்கப்படாத கதிரியக்கப் பொருட்கள் விற்பனையை தடுக்காதது ஏன்?

**எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி!**



அணு உலைகளை இயக்கும் கூட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களைக் கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட SHANTI சட்டத்தின்கீழ் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ள ஒழுங்குமுறை வழிமுறைகள் குறித்து மாநிலங்களவையில் தி.மு.க. எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார். பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் கதிரியக்கப் பொருட்களின் அங்கீகரிக்கப்படாத விற்பனை தொடர்பான பன்னாட்டு குற்றச்சாட்டுகள் குறித்தும் அவற்றை எதிர்கொள்ள அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

### 8. தமிழ்நாட்டில் கேலோ இந்தியா திட்டத்தின் செயல்பாடுகள் என்ன?

**ராஜாத்தி சல்மா**



தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ள கேலோ இந்தியா மையங்கள் (KIC) மற்றும் கேலோ இந்தியா மாநில சிறப்பு மையங்களின் (KISCE) எண்ணிக்கை குறித்து திமுக எம்.பி. ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார். கேலோ இந்தியா திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, மாநில வாரியாக திட்ட முன்மொழிவுத் தொகை, ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் விடுவிக்கப்பட்ட தொகை குறித்த விவரங்கள், கடந்த மூன்று ஆண்டுகளில் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை என்ன? தற்போது மாநிலத்தில் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வரும் பட்டியல் சாதிகள்/ பழங்குடியினர்/இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை என்ன? மற்றும் மாநிலத்தில் கூடுதல் மையங்களுக்கு அனுமதி வழங்கவோ அல்லது இத்திட்டத்தை விரிவுபடுத்தவோ அரசு திட்டமிடுகிறதா? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 9. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத் துறைகளில் பெண்கள் முன்னேற்றத்திற்கான நடவடிக்கை என்ன?

**ராஜாத்தி சல்மா**

அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகிய உயர் கல்வியில் சேர்ந்துள்ள பெண்களின் சதவீதம் மற்றும் நாட்டில் துறைவாரியாக STEM வல்லுநர்களாகப் பணிபுரியும் பெண்களின் சதவீதம் குறித்து தி.மு.க. எம்.பி. ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார். STEM கல்வி மற்றும் தொழில்களில் பெண்கள் பாதியில் படிப்பை நிறுத்தும் விகிதத்தைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன ?

(இ) STEM துறைகளில் பெண்களை ஊக்குவிக்க வும் ஆதரிக்கவும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் மேம்பாட்டு முயற்சிகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 10. தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட MSME கடன்கள் எவ்வளவு?

**அருண் நேரு**



தி.மு.க. மக்களவை உறுப்பினர் அருண் நேரு, தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) நிதி நிலைத்தன்மை குறித்து விரிவான கேள்விகளை முன்வைத்துள்ளார். கடந்த மூன்று நிதியாண்டுகளில் தமிழ்நாட்டில் முன்னுரிமைத் துறை கடன்களின் கீழ் MSME-க்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் எவ்வளவு என்பது குறித்த மாவட்ட மற்றும் ஆண்டு வாரியான புள்ளிவிவரங்களை அவர் கோரியுள்ளார். மேலும், பிணையில்லா கடன் வசதி வழங்கும் குறு மற்றும் சிறு தொழில்களுக்கான கடன் உத்திரவாத நிதி அறக்கட்டளை (CGTMSE) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் எத்தனை நிறுவனங்கள் பயன்பெற்றுள்ளன என்பது குறித்தும், தற்போதைய சூழலில் MSME கடன்களுக்கான வாராக்கடன் (NPA) விகிதம் எந்த அளவில் உள்ளது என்பது குறித்தும் அவர் விளக்கம் கேட்டுள்ளார்.

### 11. மாநிலங்களுக்கு மேம்படுத்தக் கூடிய உபகரணங்கள் ஒதுக்கீடு

**டாக்டர் கனிமொழி சோமு**



நாட்டில் உள்ள 83,993 4ஜி தளங்களில் 5ஜி-ஆக மேம்படுத்துவதற்கான கருவிகள் வழங்கப்பட்ட தளங்களின் எண்ணிக்கை விவரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார். மாநிலங்களுக்கு 4ஜி அல்லது 5ஜி-ஆக மேம்படுத்தக்கூடிய உபகரணங்களை ஒதுக்குவதற்காகப் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.



நெல்லை மத்திய மாவட்டம் மாநகர மேற்கு தி.மு.க.சார்பில் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் 1048 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மற்றும் பொதுக்கூட்டம் டவுன் குளப்பிறை தெருவில் நடைபெற்றது.இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம். எல்.ஏ.கழக மாற்றுத்திறனாளிகள் அணி செயலாளர் பேராசிரியர் தீபக் ஆகியோர் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் மேற்கு மாநகர பொறுப்பாளர் சுப்பிரமணியன்,பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம்,மாமன்ற உறுப்பினர் உலகநாதன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.